14. அரசினர் தீர்மானங்கள்—*தொடர்ச்சி*

(ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறக் கோரும் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"பேரவை விதி 25 (1)–ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறலாம்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்படுகிறது. வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 12–29 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.

17. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

42. 28–7–2021 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்–II, பிரிவு–2–ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/வவப/463(b)/2021 ஆம் எண் அறிவிக்கைக்குப் பதிலாக, தமிழ்நாடு முன் தீர்வுக்கான

அதிகார அமைப்பினை அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள உறுப்பினர்களைக் கொண்டு ஏற்படுத்தியது குறித்து 23–11–2021 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவு (B1)த் துறையின் அரசாணை (நிலை) எண் 158–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 19/2017) 166 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றன].

43. 2019–2020 ஆம் ஆண்டிற்கான உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் தொகுப்பு தணிக்கை அறிக்கை. [2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கைச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/2014) 20 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

44. 2020–2021 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவின் ஆண்டறிக்கை மற்றும் தணிக்கை அறிக்கை. [2002 ஆம் ஆண்டு ஹஜ் குழு சட்டத்தின் (மத்தியச் சட்டம் 35/2002) 34(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ்–ஆங்கிலம்)

45. 2017–2018 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் பத்தொன்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ்–ஆங்கிலம்)

46. 2019–2020 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தின் தணிக்கை அறிக்கை. [1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 80 (9) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ்–ஆங்கிலம்)

47. 2015–2016 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை. [1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 17/1961) 125 (2) (a)பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

48. 2016–2017 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை. [1961 ஆம்

2022 மார்ச் 24]

ஆண்டு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 17/1961) 125 (2) (a) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

49. 2017–2018 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை. [1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 17/1961) 125 (2) (a) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

50. 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் நாளன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (இணக்கத் தணிக்கை). (இந்திய அரசமைப்புச் சட்டம் 151(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

51. 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் நாளன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (74–வது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தைச் செயல்படுத்துதல் குறித்த செயல்திறன் தணிக்கை). (இந்திய அரசமைப்புச் சட்டம் 151(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

53. 2018–2019 ஆம் ஆண்டிற்கான சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் தணிக்கை அறிக்கை–ஆண்டுக் கணக்குகள். (தமிழ்)

54. பொதுக் கணக்குக் குழுவின் பதின்மூன்றாவது அறிக்கை. (2021–2022)

55. பொதுக் கணக்குக் குழுவின் பதினான்காவது அறிக்கை. (2021–2022)

56. பொதுக் கணக்குக் குழுவின் பதினைந்தாவது அறிக்கை. (2021–2022)

57. பொதுக் கணக்குக் குழுவின் பதினாறாவது அறிக்கை. *(2021–2022)*

58. பொதுக் கணக்குக் குழுவின் பதினேழாவது அறிக்கை. *(2021–2022)*

59. பொதுக் கணக்குக் குழுவின் பதினெட்டாவது அறிக்கை. *(2021–2022)*

60. பொதுக் கணக்குக் குழுவின் பத்தொன்பதாவது அறிக்கை. *(2021–2022)*

61. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் பட்டியல். (முதலாவது பட்டியல்) *(2022)* (வரிசை எண்கள் *1* முதல் *100* வரை)